**மாத்தறை பல்கலைக்கழகக் கல்லூரி - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

மாத்தறை பல்கலைக்கழகக் கல்லூரியின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதிக்கூற்றுக்கள் மாத்தறை பல்கலைக்கழகக் கல்லூரியின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இவ் அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, மாத்தறை பல்கலைக் கழக கல்லூரியின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையில் கணக்கீடு செய்தல் மற்றும் மாத்தறை பல்கலைக்கழக கல்லூரியின் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

மாத்தறை பல்கலைக்கழக கல்லூரியின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாத்தறை பல்கலைக் கழக கல்லூரியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு நோக்கெல்லை

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளரின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது

தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை மாற்றியமைக்க வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக் கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாத்தறை பல்கலைக் கழக கல்லூரியின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்கள் முகாமைத்துவத்தின் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் செயற்படுத்துதல், உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களித்தன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தின் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதியப்பட்ட சொத்துகளுக்கான கணக்களித் தன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் இணக்கஞ் செய்தல் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அவை தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு “முறையான திட்டமிட்டப்பட்ட” உள்ளகக் கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவனத்தினால் பேணிச் செல்வது அவசியமாகவுள்ளது.

## 1.6 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப் பிரமாணம் 133 | கல்லூரியில் உள்ளகக் கணக்காய்வு அலகொன்று நிறுவப்பட்டிருக்காததுடன், மீளாய்வாண்டிற்காக உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை. | எமது நிறுவனத்தில் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் காணப்படாமையால் உள்ளகக் கணக்காய்வு அலகு ஒன்று நிறுவுவதற்கு முடியாமல் உள்ளது. அதன் காரணமாக உள்ளகக் கணக்காய்வுகளும் மேற்கொள்வதற்கு முடியாதுள்ளது. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ii) நிதிப் பிரமாணம் 757(2) | 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்டிருந்த பண்டக் கணிப்பீட்டின் போது இனங் கண்டிருந்த ரூபா 1,118,813 தொகைக்கான முரண்பாடுகள் மற்றும் பற்றாக்குறைகள் காணப்பட்ட 24 வகையான பண்டங்கள் தொடர்பான 2022 ஏப்ரல் 01 திகதி வரை நிதிப் பிரமாணங்களின் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2021 ஆண்டில் பண்டக் கணிப்பீட்டு அறிக்கையில் காணப்பட்ட பற்றாக்குறைகள், உடைதல் மற்றும் பயன்படுத்த முடியாதவை என குறிப்பிடப்பட்ட பண்டங்கள் தொடர்பாக மீண்டும் கண்டறிவதற்காக தொழில்நுட்ப அறிவுடைய குழுவொன்று நியமனம் செய்து முறையான அறிக்கையொன்று பெற்றுக்கொண்டு தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) 2010 திசெம்பர் 14 திகதிய பீ.ஈ.டீ. 55 இலக்கம் கொண்ட | குறைந்தளவு 03 மாதங்களுக்கு ஒருமுறை ஏனும் கணக்காய்வுக் குழுக் | எமது நிறுவமத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட |

| | | | |
|---|---|---|---|
| பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பந்தி 15 | கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது கணக்காய்வுக் குழுக் கூட்டம் ஒன்றேனும் நடாத்திருக்கவில்லை. | காணப்படாமையால் 2020 ஆண்டிற்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு 2021/03/11 தொழில்நுட்பவியல் கல்லூரியில் நடாத்தப்பட்டது. | வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### நிதி விளைவுகள்

மீளாய்வாண்டு செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,475,761 இற்கான பற்றாக்குறை ஒன்று காணப்பட்டதுடன் அதற்கு நேர் மாறாக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 2,488,772 தொகையாக இருந்தது. அதன்படி நிதி விளைவுகளில் ரூபா 3,964,533 இற்கான பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. இந்த பின்னடைவிற்கு பிரதானமாக கல்விச் செயற்பாடுகளுக்கான செலவுகள் ரூபா 646,554 இனால் மற்றும் ஊழியர் கிரயம் ரூபா 3,453,285 இனால் மிகையாகச் செலவிடப்படல் காரணத்தினால் ஆகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஒரு பாடநெறிக்காக 35 மாணவர்கள் வீதம் சேர்த்துக்கொள்வதற்காக நிறுவனத்தின் வளங்கள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அலங்காரக் கலை, உபசரணை சேவை முகாமைத்துவம், குளிரூட்டி மற்றும் வாயுசீராக்கி மற்றும் சுற்றுலாச் சேவை முகாமைத்துவம் ஆகிய நான்கு பாடநெறிகளுக்காக முறையே 41, 71, 24 மற்றும் 71 விண்ணப்பங்கள் கிடைத்திருந்ததுடன், மேற்கூறிய 04 பாடநெறிகளுக்கும் மீளாய்வாண்டின் போது சேர்க்கப்பட்டிருந்த மாணவர்களின் எண்ணிக்கை முறையே 11, 22, 14 மற்றும் 23 தொகை மிகவும் குறைந்த எண்ணிக்கையாக இருந்தது. மேலும், மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்காக விளம்பரச் செலவாக ரூபா 674,100 தொகை நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 2019 மாணவர் குழுவின் மாணவர்கள் பதிவு செய்வதில் ஒப்பீட்டளவு குறைவொன்றை காட்டியது. ஏனைய பாடநெறிகளுடன் ஒப்பிடும் போது இந்த பாடநெறிகளுக்காக கிடைக்கக் கூடிய விண்ணப்பங்களும் குறைவாகும். எனினும், அதன் பின்னர் சேர்க்கப்பட்ட மாணவர் தொகுதியில் ஒப்பீட்டளவு முன்னேற்றமொன்றை காட்டுகின்றது. தற்போது சேர்க்கப்பட்ட மாணவர் தொகுதியில் குறிப்பிட்ட மாணவர் எண்ணிக்கையை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. ஏனைய பாடநெறிகளுக்காக தகைமை பெறாத மாணவர்கள் இந்த பாடநெறிக்கான தகைமையை பூர்த்தி செய்திருந்தால் நேர்முகப் பரீட்சை பல சுற்றுகளின் மூலம் | பாடநெறிகளுக்காக ஈடுபடுத்தப்பட்ட வளங்கள் வினைத் திறனுடன் பயன்படுத்தி கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதன்படி, அந்த பாடநெறிகளுக்காக ஈடுபடுத்தப்பட்ட வளங்கள் வினைத்திறனுடன் பயன்படுத்தக் கூடிய சந்தர்ப்பங்களை இழந்துள்ளது. | ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது வெளி விரிவுரையாளர்களை ஈடுபடுத்தி கல்லூரியில் நடாத்தப்படுகின்ற 06 பாடநெறிகளில் 33 பாடங்களுக்கான விரிவுரை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த மணித்தியாள எண்ணிக்கை 3,464 எனினும், 756 மணித்தியாளங்கள் மாத்திரமே விரிவுரைகள் நடாத்தப்பட்டிருந்தன. அதன்படி, திட்டமிடப்பட்ட 2,708 மணித்தியாளங்கள் விரிவுரை நடாத்தப்பட்டிருக்கவில்லை. | Covid 19 காரணமாக விரிவுரைகள் நடாத்துதல் online முறைமையின் மூலம் நடாத்தப்பட்டது. பொதுவாக வகுப்பறையில் விரிவுரைகள் நடாத்துவது போல் online விரிவுரையின் போது மாணவர்களை தக்கித்துக்கொள்ள முடியாமல் உள்ளது. மேலும், வகுப்பறை விரிவுரைகளைவிட வேகமாக online விரிவுரைகள் நடாத்திச்செல்லல் சாதாரண நிலைமை ஆகும். அதன் காரணமாக குறிப்பிட்ட பாட விதானம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், பொதுவான வகுப்பறைக்கு திட்டமிடப்பட்டிருந்த விரிவுரை மணித்தியாள எண்ணிக்கை online முறையின் மூலம் பூர்த்தி செய்யப்படவில்லை. | திட்டமிடப்பட்ட விரிவுரை மணித்தியாள எண்ணிக்கைக்குரிய விரிவுரைகள் நடாத்தப்பட வேண்டும். |
| (இ) | கல்லூரி நடாத்தப்பட்டு வரும் 0.5854 ஹெக்டயர் காணி மற்றும் கட்டிடங்கள் கல்லூரியின் பெயரிற்கு உரித்தாக்குவதற்கு 2022 ஜூன் 30 திகதி வரை முடியாமல் இருந்தது. | பல்கலைக்கழக கல்லூரி நிறுவப்பட்டுள்ள 0.5854 ஹெக்டயர் காணி மாத்தறை பிரதேச செயலாளரினால் திறன் அபிவிருத்தி அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அந்தக் காணியின் அனுபவிக்கும் உரிமை அமைச்சின் கீழ் காணப்படுவதனால் மாத்தறை பல்கலைக்கழக கல்லூரி நடாத்திச் செல்லல் மற்றும் அபிவிருத்தி செய்வதில் பாதிப்பொன்று காணப்படவில்லை என அமைச்சினால் அறிவிக்கப்பட்டிருந்தது. | காணியை கல்லூரியின் பெயரில் உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.2 விளைவற்ற அல்லது குறைபயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாணவர்களின் செய்முறை செயற்பாடுகளுக்காக 2014 திசெம்பர் மாதத்தில் ரூபா 1,250,000 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த மோட்டார் வாகன ஏற்றம் மற்றும் சக்கர சீராக்க (Vehicle Hois and Wheel Alignment) உபகரணம் 2022 மார்ச் 24 திகதி அளவிலும் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | சுயமாக அசையும் பாடநெறிக்கு சொந்தமான மோட்டார் வாகன ஏற்றத்துடனான, இரண்டு சக்கர சீராக்க உபகரணத்தை பொறுத்துவதற்கான இட வசதிகள் தொடர்பாக செய்முறைசார் சிக்கல்கள் காணப்படுகின்றது. இந்த உபகரணத்தை பொறுத்துவதற்காக சுமார் 38 அடி நீளம் 20 அடி உயரம் மற்றும் 15 அடி அகலத்தை உடைய கட்டிடமொன்று தேவைப்படுகின்றது. குறிப்பிட்ட உபகரணத்தை பொறுத்துவதற்காக நிலப் பகுதி ஒன்று இந்த நிறுவனத்தில் காணப்படவில்லை. மாற்றுக் காணியொன்று பெற்றுத் தரும்படி UNIVOTEC நிறுவனம் மற்றும் அமைச்சுக்கு விண்ணப்பித்திருந்த போதிலும் இதுவரை காணியொன்று கிடைத்திருக்கவில்லை. எமது நிறுவனத்திற்கு மாற்றுக்காணி ஒன்று கிடைத்த பின்னர் குறிப்பிட்ட உபகரணத்தை உரிய நியமத்தின் படி பொருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | முறையான சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொண்டு கொள்வனவு செய்ய வேண்டியிருந்த போதிலும், கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்களை குறிப்பிட்ட கருமத்திற்காக பயன்படுத்த வேண்டும். |